தினமலர்
கோயம்புத்தூர் | வெள்ளி | 1.12.2023

# பி.பி.ஏ., படிப்புகளுக்கு ஏ.ஐ.சி.டி.இ., அனுமதி!

## கலை அறிவியல் கல்லூரிகள் எதிர்ப்பு

கோவை, டிச.1–

பி.பி.ஏ., பி.சி.ஏ., படிப்புகள் வழங்கும் நிறுவனங்கள், அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ.,) அனுமதி அவசியம் என்ற அறிவிப்புக்கு, தமிழ்நாடு சுயநிதி கலை அறிவியல் மற்றும் மேலாண்மை கல்லூரிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு சுயநிதி கலை அறிவியல் மற்றும் மேலாண்மை கல்லூரிகளின் சங்க கூட்டம் நேற்று பீளமேடு கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்தது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு சுயநிதி கலை, அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி மாநில தலைவர் அஜீத்குமார் லால் மோகன், செயலர் சேதுபதி, நிர்வாக உறுப்பினர்கள் மலர் செல்வி, யசோதா தேவி, ரஹீத் கசாலி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.உயர்கல்வித் துறையின் கீழ், தொழில்நுட்ப கல்லூரிகள் ஏ.ஐ.சி.டி.இ., கட்டுப்பாட்டிலும், தொழில்நுட்பம் சாராத கலை, அறிவியல் கல்லூரிகள் யு.ஜி.சி கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன. தற்போது, கலை அறிவியல் கல்லூரிகளில், புதிய பாடப்பிரிவுகளை துவக்க சம்பந்தப்பட்ட பல்கலை நிர்வாகங்கள் ஒப்புதல் அளித்தால் போதுமானது.




கோவை பி.எஸ்.ஜி.ஆர்., கிருஷ்ணம்மாள் கல்லூரியில், தனியார் சுயநிதி கல்லூரிகள் சங்கம் சார்பில் நடந்த கருத்தரங்கில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக துணை தலைவர் துர்கா ராஜுலு பேசினார். அருகில் (இடமிருந்து) பி.எஸ்.ஜி.ஆர்., கிருஷ்ணம்மாள் கல்லூரி செயலாளர் யசோதா தேவி, தனியார் சுயநிதி கல்லூரிகள் சங்க தலைவர் அஜித்குமார் லால்மோகன், செயலாளர் சேதுபதி, நிர்வாக குழு உறுப்பினர் ரஹீத் கசாலி உள்ளிட்டோர்.

மூன்று ஆண்டுகள் அங்கீகாரம் பெற்ற பின், நான்காம் ஆண்டு முதல் நிரந்தர அங்கீகாரமாக மாறிவிடும்.

இந்நிலையில், தொழில்நுட்பம் சாராத பி.பி.ஏ., பி.சி.ஏ., படிப்புகள் பொறியியல் கல்லூரிகளில்துவங்கலாம் என்றும், இப்பாடப்பிரிவுகள் நடத்தும் கலை அறிவியல் கல்லூரிகளும் ஏ.ஐ.சி.டி.இ., அங்கீகாரம் பெறவேண்டும் , பி.பி.ஏ., பி.சி.ஏ., படிப்புகள் எம்.பி.ஏ., படிப்புடன் ஒருங்கிணைந்து வழங்கப்படும் எனவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது. தொழில்நுட்பம் சாராத இப்படிப்புகள் பொறியியல், தொழில்நுட்ப கல்லூரிகளில் துவங்கும் பட்சத்தில் கட்டணங்கள் கணிசமாக உயர்ந்து மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் பொருளாதார சுமையை ஏற்படும் வாய்ப்பு எழுந்துள்ளது. இதுகுறித்து கல்லூரி நிர்வாகிகள், முதல்வர்கள், ஆசிரியர்கள் நேற்று கோவையில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

பி.பி.ஏ., பி.சி.ஏ., படிப்புகள் வழங்கும் நிறுவனங்கள், அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ.) அனுமதி அவசியம் என்ற அறிவிப்புக்கு எதிராக கையெழுத்து இயக்கம் நடத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்து கலை, அறிவியல் சார்ந்த பல்கலைகள், அதன் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்லூரிகள் இணைந்து செயல்பட திட்டமிட்டுள்ளன.